# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:** 57 **தேதி:-** 19.08.2015

## வட்டியை குறைக்க வலியுறுத்தி சொசைட்டி தலைவருடன் சந்திப்பு...



சொசைட்டி கடனுக்கான வட்டி விகிதத்தை ஜூலை 1 முதல் 16.5 சதமானமாக சொசைட்டி நிர்வாகம் உயர்த்தியது. வங்கிகளில் வட்டி குறைந்து வரும் சூழலில் சொசைட்டி நிர்வாகத்தின் இந்த வட்டி உயர்வு அறிவிப்பை வாபஸ் வாங்க வலியுறுத்தி தமிழகம் முழுவதும் கையெழுத்து இயக்கம் நடத்திட தமிழ் மாநிலச் சங்கம் அறைகூவல் விட்டது. அதன் படி அனைத்து மாவட்டங்களிலிலும் கையெழுத்து இயக்கம் வெற்றிகரமாக நடத்தப்பட்டு 4000 க்கும் மேற்பட்ட கையெழுத்துக்கள் மாநிலச் சங்கத்திற்கு வந்தடைந்தது.

கையெழுத்து இயக்கத்தில் பெறப்பட்ட கையெழுத்துக்களை இன்றைய தினம் (19.08.2015) சொசைட்டி தலைவரை சந்தித்து தோழர் S.அன்புமணி தலைமையில் 20க்கும் மேற்பட்டோர் வழங்கினர். சொசைட்டி தலைவரிடம் கீழ்கண்ட அம்சங்கள் ஆழமாக விவாதிக்கப்பட்டன.

- 01.07.2015 முதல் சொசைட்டி நிர்வாகம் வட்டி விகிதத்தை 1.5 சதமானம் உயர்த்தி இருப்பது என்பது அனைத்து சொசைட்டி உறுப்பினர்களையும் கடுமையாக பாதித்துள்ளது. இந்த வட்டி உயர்வு தேவையற்றது. பல கூட்டுறவு சொசைட்டிகளில் வட்டி விகிதம் குறைவாக இருக்கும் போது நமது சொசைட்டியில் மட்டும் வட்டி விகிதம் உயர்ந்திருப்பது நியாயம்

அல்ல என்பதை வலியுறுத்தினோம். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் எல்லாம் கடனுக்கான வட்டியை குறைத்து வரும் போது நமது சொசைட்டி வட்டியை உயர்த்துவது சரியல்ல. எனவே வட்டி உயர்வை திரும்பப்பெற வேண்டும் என்று தலைவரிடம் வலியுறுத்தப்பட்டது.

- சொசைட்டி உறுப்பினர்களுக்கு சொந்தமான 88 ஏக்கர் நிலத்தை உறுப்பினர்களுக்கே பிரித்துக் கொடுக்க வேண்டும். மாதம் தோறும் ஊழியர்கள் பணி ஓய்வு பெறுவதால் அவர்களுக்கு சொசைட்டி நிலத்தில் பங்கில்லாமல் போகின்றது. எல்லோருடைய நிதியிலிருந்தும் வாங்கப்பட்ட நிலத்தை கால தாமதமின்றி சொசைட்டி உறுப்பினர்களுக்கு உடனடியாக பிரித்துக்கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.
- ஜனவரி மாதம் RGB கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் அமலாக்கத்தில் சுணக்கம் உள்ளதையும் சுட்டி காண்பித்திருக்கிறோம். உதாரணமாக Thrift Fund-க்கான வட்டி விகிதம் 8% லிருந்து 9% ஆக உயர்த்த முடிவெடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அது இன்னும் அமலாக்கப்படவில்லை என்பதை சுட்டிக் காட்டினோம். அப்படி ஒரு முடிவே எடுக்கவில்லை என்று தலைவர் கூறினார். ஆதாரங்களுடன் எடுக்கப்பட்ட முடிவை நமது தலைவர்கள் சுட்டிக் காட்டிய பின் தலைவர் அதனை ஏற்றுக் கொண்டு 01.04.2015 முதல் 1 சதவிகிதம் உயர்த்த ஒப்புக்கொண்டார்.
- சொசைட்டி செய்யக்கூடிய சில வீண் செலவுகளை சுட்டிக்காட்டி தவிர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

ஊழியர்களின் நியாயமான கோரிக்கையான வட்டி உயர்வை சொசைட்டி நிர்வாகம் வாபஸ் பெறும் என்று நாம் நம்புகிறோம். வட்டி குறைக்காவிட்டால் நமது போராட்டம் தொடரும் என்பதை ஆணித்தரமாக தெரிவித்திருக்கிறோம். நமது கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை எனில் BSNL விரிவடந்த மாநில செயற்குழு முடிவின்படி செப்டம்பர் 15ம் தேதி அனைத்து கிளைகளிலும் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்த சந்திப்பில் தோழர் S.அன்புமணியுடன் மாநிலச் சங்க நிர்வாகிகள் தோழர் K.சீனிவாசன், R.மகேந்திரன், மாவட்ட செயலர்கள் தோழர் K.V.சிவக்குமரன், R.புருஷோத்தமன் உள்ளிட்ட RGB தோழர்கள், இயக்க முன்னோடிகள் கலந்துகொண்டதை தமிழ் மாநிலச் சங்கம் பாராட்டுகிறது.

**தோழமையுடன்**

**A.பாபு ராதாகிருஷ்ணன்**
**மாநிலச்செயலாளர்.**